தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (தன்னாட்சி), முதல்வர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்– முனைவர் மு. சுமதி எம்.எஸ்.சி., பி.எட்., பிஎச்.டி.,

ந.க.எண்.893/ஈ/2023 நாள்.07.08.2024

பொருள் – பொதுப் பணிகள் – கருணை அடிப்படைப் பணி நியமனம் – அரசுப் பணியிலிருக்கும் போதே இயற்கை எய்திய பொருளியல் உதவிப் பேராசிரியர் திரு அ. நாகராஜன் அவர்களின் வாரிசுதாரர் திருமதி. சி. தீபா – தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியில் சேர்ந்த நாளான 07.07.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடல் – தொடர்பாக.

பார்வை–

1. சென்னை – 15, கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள் ப.மு.எண்.34096/பி2/2022 நாள் 27.06.2023.
2. தஞ்சாவூர், மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி (த), முதல்வர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.893/ஈ/2023 நாள் 29.06.2023
3. திருமதி. சி. தீபா, இளநிலை உதவியாளரது பணிசேர் அறிக்கை நாள் 07.07.2023
4. இக்கல்லூரி முதல்வர் அவர்களின் கடித ந.க.எண்.893/ஈ/2023 நாள் 07.07.2023
5. சென்னை – 15, கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் கடிதம் ந.க.எண்.1058/பி1/2023 நாள். 06.12.2023
6. திருமதி. சி. தீபா, இளநிலை உதவியாளரது கடித நாள் 26.07.2024
7. தொடர்புடைய அரசாணைகள் மற்றும் அரசுக் கடிதங்கள்

----

கும்பகோணம், அரசுகலைக் கல்லூரி (தன்னாட்சி) – இல்பொருளியல் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றிய திரு அ. நாகராஜன் என்பார் பணியிலிருக்கும் போதே கடந்த 09.08.2021 அன்று இயற்கை எய்தினார்.

பார்வை (1) இல்காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளில் அன்னாரது பத்தாம் வகுப்புச் சான்றிதழின் உண்மைத் தன்மை அரசுத் தேர்வுகள் இயக்குநரால் வழங்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இறந்த அரசு ஊழியர் திரு. அ. நாகராஜன் என்பாரின் வாரிசுதாரரும் மனைவியுமான திருமதி. சி. தீபா என்பாருக்கு இக்கல்லூரியில் இளநிலை உதவியாளர் பணியிடம் ஒதுக்கீடு செய்து ஆணைவழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பார்வை (2) இல் காணும் இக்கல்லூரி முதல்வரின் செயல்முறைகளில் அன்னாருக்கு தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 17 (1) இன் கீழ் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது.

அவ் ஆணையினை ஏற்று, அன்னார் பார்வை (3) இல் காணும் தனது கடிதம் வாயிலாக உடற்தகுதிச் சான்று மற்றும் அசல் கல்விச் சான்றுகளை முன்னிறுத்தி 07.07.2023 முற்பகல் இக்கல்லூரியில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தார். அன்னாரது பணிசேர் அறிக்கை பார்வை (4) இல் காணும் முதல்வரின் கடிதம் வாயிலாக கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களுக்குப் பணிந்தனுப்பப்பட்டது.

தற்போது பார்வை (5) இல் காணும் கடிதத்தில் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் பணிநியமனம்) விதிகள் 2023 - இன் வதி 16 இல் ஒவ்வொரு நியமன அதிகாரியும் இந்த விதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட நபரின் தகுதி பொருட்டு பணியில் சேர்ந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் அவரது பணிகளை முறைப்படுத்த வேண்டும் எனவும், மேற்காண் விதியின் அடிப்படையில் கருணை அடிப்படையில் நியமனம் பெற்ற பணியாளர்களது பணியினை வரன்முறை செய்வதற்கு விதித் தளர்வு ஏதும் தேவைப்படாத நிலையில் தங்களது அளவிலேயே பணிவரன்முறை செய்யலாம் என அரசுக் கடிதத்தில் தெரிவித்துள்ளதாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அன்னார் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய கல்வித் தகுதியான பத்தாம்வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் மற்றும் வயது வரம்பினையும் நிறைவு செய்துள்ளார். கருணை அடிப்படை நியமனத்திற்கான அனைத்து நிபந்தனைகளையும் நிறைவு செய்துள்ளார். எனவே அன்னார் சார்பாக விதிகளைத் தளர்த்த வேண்டிய நிலை எழவில்லை. அன்னார் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை எனவும் முறையாகப் பணிக்கு வருகின்றார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

எனவே திருமதி. சி. தீபா என்பாரது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணி தொகுதியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் அன்னார் பணியேற்ற நாளாகிய 07.07.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடலாகிறது. அன்னாரை பணிவரன்முறை செய்த நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்குள் தகுதிகாண் பருவத்தில் இருத்தி ஆணையிடலாகிறது. அன்னார் தகுதிகாண் பருவக் காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படைப் பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடலாகிறது.

அன்னார் இதன் பொருட்டு பெற வேண்டிய நிலுவைத் தொகைகள் ஏதுமிருப்பின் அதனைப் பெறத் தகுதியுடையவர் எனவும் ஆணையிடலாகிறது.

முதல்வர்,
மன்னர் சரபோஜி அரசு கல்லூரி,
(தன்னாட்சி)
தஞ்சாவூர்-613 005.

முதல்வர்

பெறுநர்
திருமதி. சி. தீபா, இளநிலை உதவியாளர்

நகல் பணிந்தனுப்பலாகிறது
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை -15

நகல் - மாவட்டக் கருவூல அலுவலர்,
பட்டியல்
பணிப்பதிவேடு

உபரி